


**05.09.2026 – 13.45**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மாணவ, மாணவிகளை வடிவமைப்பதில் ஆசிரியர்கள் இன்றியமையா பணியாற்றுவதாக குடியரசுத்தலைவர் திருமதி.திரௌபதி முர்மு, பிரதமர் திரு.நரேந்திரமோடி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

2. சென்னையில் 396 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருதுகளை மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் இன்று வழங்கினார்.

3. கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் 155வது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது. வ.உ.சிதம்பரனாரின் தேசப் பற்றையும், தியாகத்தையும் என்றென்றும் நினைவு கூர்வோம் என்று முதலமைச்சர் திரு.விஜய் கூறியுள்ளார்.

4. திமுக முன்னாள் அமைச்சர் திரு.கே.என்.நேரு மற்றும் அவரது உறவினர்கள் இல்லத்தில் லஞ்ச ஒழிப்பு காவல் துறையினர் இன்று சோதனை மேற்கொண்டுள்ளனர்.

5. சீன மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் ராங்கி ரெட்டி, சிராக் ஷெட்டி இணை – மலேசிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

**********

ஆசிரியர் தினம்

நாட்டிலுள்ள கோடிக்கணக்கான மாணவ, மாணவிகளின் அறிவுத்திறனை மேம்படுத்தி, நல் மதிப்பீடுகளை உருவாக்குவதில் ஆசிரியர்கள் இன்றியமையா பணியாற்றுவதாக குடியரசுத்தலைவர் திருமதி.திரௌபதி முர்மு பாராட்டு தெரிவித்துள்ளார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர்.சர்வபள்ளி ராதாகிருஷ்ணனின் பிறந்த தினம் தேசிய ஆசிரியர் தினமாக கொண்டாடப்படும் நிலையில், புதுதில்லியில் தேசிய நல்லாசிரியர் விருதுகளை 82 கல்வியாளர்களுக்கு குடியரசுத்தலைவர் வழங்கி உரையாற்றினார்.

ஆசிரியர்கள் மாணாக்கரிடம் அன்புடனும், பொறுமையுடனும் அவர்களின் நலனில் அக்கறை உடையவர்களாகவும் திகழ வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

பாடத்திட்டங்களுக்கு அப்பாற்பட்டு, ஆசிரியர்கள் மாணாக்கரை வடிவமைப்பதில் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆசிரியர்கள் மட்டுமல்லாமல் பெற்றோர்களும், பாதுகாவலர்களும், சமூகமும் மாணவர்கள் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அர்ப்பணிப்பு மிகு ஆசிரியர்களால் நம் நாடு உலகளாவிய முன்னோடி நாடாக உருவெடுக்கும் என்று குடியரசுத்தலைவர் கூறியுள்ளார்.

தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர்களுடன் புதுதில்லியில் கலந்துரையாடிய பிரதமர் திரு.நரேந்திரமோடி, மாணவர்களின் வாழ்வில் ஆக்கப்பூர்வமான மாற்றங்களை ஏற்படுத்தி, அவர்களின் வாழ்க்கையை செம்மைப்படுத்துவதில் ஆசிரியர்கள் முக்கியப் பங்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

புத்தகங்கள், பாடத்திட்டங்களை தாண்டி, உலகியலுக்கு ஏற்ற திறன் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தினார்.

கைப்பேசி உள்ளிட்ட மின்னணு சாதனங்களின் தேவையற்ற பயன்பாட்டைத் தவிர்க்க விளையாட்டுகளில் குழந்தைகள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என கூறிய பிரதமர், கல்வியுடன் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

முதலமைச்சர் திரு.விஜய் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், ஆசிரியர்களின் தன்னலமற்ற அர்ப்பணிப்பும், வழிகாட்டுதலும் மாணாக்கரின் எதிர்காலத்தை மேலும் ஒளிமயமாக்கட்டும் என வாழ்த்தியுள்ளார்.

சென்னையில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழகத்தைச் சேர்ந்த 396 ஆசிரியர்களுக்கு மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் நல்லாசிரியர் விருதுகளை வழங்கினார்.

இவ்விருதுகள் தங்கள் பணியை ஆர்வத்துடன் தொடர ஊக்கமளிப்பதாக விருது பெற்ற திருச்சி மாவட்ட ஆசிரியைகள் எமது செய்திப்பிரிவிடம் தெரிவித்தனர்.

**********

<u>வ.உ.சி.</u>

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் 155வது பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, முதலமைச்சர் திரு.விஜய் வெளியிட்ட செய்தியில், நாட்டின் விடுதலைக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த செக்கிழுத்த செம்மல் வ.உ.சிதம்பரனாரின் தேசப் பற்றையும், தியாகத்தையும் என்றென்றும் நினைவு கூர்வோம் என தெரிவித்துள்ளார்.

அரசியல் மட்டுமன்றி பொருளாதார விடுதலையை முன்னெடுக்கும் வகையில் சுதேசி கப்பல் நிறுவனத்தை தொடங்கிய அன்னாரது முயற்சி மக்களின் தற்சார்பு

உணர்விற்கு புதிய எழுச்சியை ஏற்படுத்தும் என முதலமைச்சர் கூறியுள்ளார்.

சென்னை கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் உள்ள அன்னாரது திருவுருவ படத்திற்கு மாநில அமைச்சர்கள் திரு.ஆனந்த், டாக்டர்.அருண்ராஜ், திரு.வெங்கடரமணன், திரு.ராஜ்மோகன், திரு. ராஜேஷ்குமார் உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

ஆங்கிலேயருக்கு எதிரான விடுதலை போராட்டத்தை முன்னெடுத்து சுதேசி உணர்வை மக்களிடையே விதைத்த வ.உ.சி-யின் வீரத்தையும், தியாகத்தையும் போற்றி வணங்குவோம் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர்.எல்.முருகன் கூறியுள்ளார்.

கோவை வ.உ.சி. மைதானத்தில் உள்ள சிதம்பரனார் சிலைக்கு மாநில அமைச்சர் திரு.சம்பத்குமாரும்,

மதுரை சிம்மக்கல் பகுதியிலுள்ள சிலைக்கு மாநில மின்துறை அமைச்சர் திரு.நிர்மல்குமாரும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

வ.உ.சிதம்பரனார் பிறந்த இடமான தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் நிறுவப்பட்டுள்ள முழு உருவ சிலைக்கு ஏராளமானோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**********

<u>சி.பி.ராதாகிருஷ்ணன்</u>

குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் இன்று தமிழகம் வருகிறார்.

கிண்டியில் நடைபெறும் இதய நோய்களுக்கான அதிநவீன சிகிச்சைகள் குறித்த தேசிய மருத்துவர்கள் மாநாட்டில் பங்கேற்கும் அவர், தினமலர் நாளிதழின் 75வது ஆண்டு நிறுவன நாள் கொண்டாட்டங்களில் பங்கேற்று சிறப்பு தபால் தலையையும் வெளியிடுகிறார்.

**********

விபத்து

கேரள மாநிலம் திருச்சூர் அருகே நள்ளிரவு நேரிட்ட சாலை விபத்தில் திண்டுக்கல் தனியார் பொறியியல் கல்லூரியைச் சேர்ந்த 8 மாணவர்கள் உயிரிழந்தனர்.

இவர்கள் சென்று கொண்டிருந்த கார் நின்று கொண்டிருந்த லாரி மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டது.

**********

கே.என்.நேரு

திமுக முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு மற்றும் அவரது சகோதரர்களின் இல்லத்தில் லஞ்ச ஒழிப்பு காவல் துறையினர் இன்று சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

திருச்சி, சென்னை, கோவையில் உள்ள திரு.கே.என்.நேருவின் வீடுகள், அலுவலகங்கள் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை கண்காணிப்பாளர் திரு.மணிகண்டன் தலைமையில் 15 பேர் கொண்ட குழு சோதனைகளில் ஈடுபட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறையில் ஆயிரத்து 20 கோடி ஊழல் நடைபெற்றதாக கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் இந்த சோதனை நடைபெறுகிறது.

இதனிடையே மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் திரு.நிர்மல்குமார், இந்த சோதனை எவ்வித பழிவாங்குதல் நடவடிக்கையும் கிடையாது என்று கூறியுள்ளார்.

லஞ்ச ஒழிப்பு துறை செயல்பாடுகளில் தலையிடும் உரிமை யாருக்கும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

**********

சம்பத்குமார்

கோவை மாவட்டம் மதுக்கரையில் தனியார் சிமெண்ட் தொழிற்சாலையால் சுற்றுச்சூழல் மற்றும் பாதிக்கப்படாத வகையில் அரசு நடவடிக்கை

மேற்கொள்ளும் என்று மாநில பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.சம்பத்குமார் கூறியுள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், சுற்றுச்சூழல் மாசுவால் மக்களின் ஆரோக்கியம் நலன் பாதிக்காத வகையில் உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்றார்.

**********

<u>மாணிக்கம் தாக்கூர்</u>

தவெக கூட்டணியின் பெயர் வரும் 9 ஆம் தேதி அறிவிக்கப்படும் என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு.மாணிக்கம் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அன்றைய தினம் சென்னை அருகே பனையூரில் நடைபெறும் கூட்டணி கட்சிகளின் கூட்டத்தில் கூட்டணியின் பெயர் இறுதி செய்யப்படும் என்றார்.

இதனிடையே, இந்த கூட்டத்தில் கலந்து கொள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திரு.தொல்.திருமாவளவனை நேரில் சந்தித்து அமைச்சர்கள் திரு.ஆனந்த், திரு.ஆதவ் அர்ஜூனா, டாக்டர்.அருண்ராஜ் உள்ளிட்டோர் இன்று அழைப்பு விடுத்துள்ளனர்.

**********

<u>முதுகுதண்டுவட பாதிப்பு தினம்</u>

உலக முதுகு தண்டுவட பாதிப்பு விழிப்புணர்வு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இத்தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திருமதி.சினேகா துவக்கி வைத்தார்.

வேலூரில் நடைபெற்ற விழிப்புணர்வு பேரணியில் நூற்றுக்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**********

<u>இருவரி</u>

பெரம்பலூர் மாவட்டம் ஒகளூர் கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்ட முகாம் ஆட்சித்தலைவர் திருமதி ஷரண்யா அரி தலைமையில் வரும் 9 ஆம் தேதி நடைபெற உள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கு ரேசன் பொருட்கள் இன்றும், நாளை மறுநாளும் வினியோகம் செய்யப்படும் என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் கும்பாபிஷேகம் வரும் 17 ஆம் தேதி நடைபெற உள்ள நிலையில், இதற்கான முன்னேற்பாட்டு பணிகள் குறித்து மாநகராட்சி ஆணையர் திரு.கௌரவ்குமார் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

குடிநீர், கழிவறை, தெருவிளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஆய்வு செய்த அவர், சுற்றுப்புற பகுதிகளை தூய்மையாக வைத்துக் கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

நாமக்கல் மாவட்டம் தெத்துக்காடு கிராமத்தில் கால்நடைகளுக்கான சிறப்பு முகாம் இன்று தொடங்கியது.

தடுப்பூசிகள், குடற்புழு நீக்கம், சிறுஅறுவை சிகிச்சைகள் உள்ளிட்ட கால்நடைகளுக்கான சுகாதார வசதிகள் வழங்கப்படும் என்பதால் கால்நடை வளர்ப்போர் இதனை பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு.மதுபாலன் அறிவுறுத்தியுள்ளார்.

**********

மகளிர் கிரிக்கெட்

ஆசிய கோப்பை மகளிர் 20 - 20 கிரிக்கெட் போட்டியில் துபாயில் இன்றிரவு 8 மணிக்கு இந்தியா – பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

**********

பேட்மிட்டன்

சீன மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் ஆடவர் இரட்டையர் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ராங்கி ரெட்டி-சிராக் ஷெட்டி இணை – மலேசியாவின் ஆயூப் கியோன் இணையை இன்று எதிர்கொள்கிறது.

**********

டென்னிஸ்

U.S ஒப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் முதல் சுற்றில் இந்தியாவின் யூக்கி பாம்ரீ – நியூசிலாந்தின் வீனஸ் இணை – அமெரிக்க இணையை இன்று எதிர்கொள்கிறது.

**********